அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.285/2015
தேதி.01.12.2015

# கனமழை, பாதிப்புகள் தொடர்கிறது மத்திய முழு மீண்டும் தமிழகம் வரவேண்டும் நிவாரணத் தொகை ரூ 20,000 கோடி வழங்க வேண்டும்

*தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் மீண்டும் கனமழை தொடர்ந்து வருகிறது. புழல் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரிகளில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீராலும், தொடர்ந்து விடாமல் பெய்துவரும் கன மழையாலும் சென்னை மாநகரம், தண்ணீரில் மிதந்து வருகிறது.*

*மக்களின் உடைமைகள், வீடுகள், வாகனங்கள் பாதிப்புக்குள்ளாகி வீடுகளில் தங்க முடியாமல் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியில் தங்கி இருக்கிறார்கள். திடீரென்று ஏற்படும் வெள்ளப்பெருக்கால் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டு வருகிறது.*

*ஏற்கனவே பெரிதும் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டம் மீண்டும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ளது. கடலூர் நகரம் தண்ணீரில் மிதக்கிறது. தமிழக அரசு விரைவான, விரிவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இருந்தபோதிலும், நாம் அனைவரும் தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும்.*

## மத்திய குழு

*மத்திய அரசு தமிழகத்திற்கு 10,000 கோடி நிவாரணத்தொகை வழங்க வேண்டும் என்று ஏற்கனவே வலியுறுத்தி இருந்தோம்.இப்போது நிலைமை மேலும் மேலும்*

மோசமடைந்திருக்கிறது. நிவாரணப் பணிகளில் பாதிப்புகள் சீராக்கப்படுவதற்கு முன்னதாக மீண்டும் கனமழை பெய்து பாதிப்புகள் அதிகரித்துக் கொண்டே போகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை நிலை முற்றிலும் பாதிக்கப் பட்டுள்ளது.அனைத்து சாலைகளும் மிக, மிக பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

மத்தியக் குழு வந்து பார்வையிட்டுச் சென்ற பிறகு மீண்டும் பாதிப்புகள் கூடுதலாகி உள்ளது. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்பட கடலூர் மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. தூத்துக்குடி மாவட்டம் உள்பட பாதிக்கப்பட்ட மற்ற மாவட்டங்களுக்கு மத்தியக்குழு கடந்த முறை சென்று பார்வையிடவில்லை.

எனவே, மத்திய அரசு மீண்டும் ஒரு குழுவை அனுப்பி விரிவான வகையில், பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட வேண்டும். தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று பாதிப்புகளைப் பார்வையிட வேண்டும். நிவாரணத் தொகை கணக்கிடுதலில் இப்போது புதிதாக ஏற்பட்ட பாதிப்புகளையும் சேர்த்திட வேண்டும் என்பதை கேட்டுக்கொள்கிறேன்.

சமத்துவ மக்கள் கட்சி சார்பில் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ள பகுதிகளுக்கு வேன்கள் மூலம் நடமாடும் மருத்துவ உதவிகள், இலவச மருந்துகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.
நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,
தலைவர்.